Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -17 | 03-11-2003 | திங்கட்கிழமை | ஓசை 258

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi. (சி-8689) யாழ் சாலை, கிளிநொச்சி.

## தனக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டுவர ஆனந்தசங்கரி எடுத்த முயற்சி பிசுபிசுப்பு

### யாழ் கூட்டத்தில் உறுப்பினர்கள் வெளிநடப்பு

**தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரிக்கு எதிராக மட்டக்களப்பு.மற்றும் திருகோணமலை மாவட்ட கிளைகளால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானங்களுக்கு எதிராகவும், அவருக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் தீர்மானமொன்றை நிறைவேற்ற நேற்று யாழில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிசுபிசுத்துப்போயுள்ளது.**

முன்னதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைகளுக் கிடையே மூண்டுள்ள சிக்கல்கள் தீர்ந்து, கட்சியின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திப் பிரார்த்தனை நிகழ்வொன்றிற்கு ஏற்பாடாகியிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட தலைமையலுவலகமான "தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவு இல்லத்தில" இப்பிரார்த்தனை நிகழ்விற்கு ஏற்பாடாகியிருந்தது.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## அமைப்பாளர் பதவியிலிருந்து பெர்னாண்டோ புள்ளே விலகல்

பொதுசன முன்பள்ளியின் பாராளுமன்ற உறுப்பினர் கெயராக் பெர்னாண்டோபுள்ளே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டான தொகுதி அமைப்பாளர் நிலையிலிருந்து விலகியுள்ளார்.

இதற்கான காரணத்தை அவர் வெளிப்படுத்தவில்லை.

எனினும் கட்சியில் இருந்து விலகும் எந்தவொரு யோசனையும் தம்மிடம் இல்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் தகவல் அறிந்த தரப்புக்களின்படி இவர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்வார்என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

## வடக்கு-கிழக்கு நிலை குறித்து ஆராய அதாவுல்லாக்கு ஹக்கீம் அழைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் தற்போதைய நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் சக அமைச்சர் அதாவுல்லாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவராக ரவூப் ஹக்கீம் விளங்குகின்ற அதேசமயம் அதாவுல்லா அதேகட்சியின் போட்டிக் குழு ஒன்றின் தலைவராக இருக்கின்றார்.

அமைச்சர் ஹக்கீம் தெரிவித்த தகவலில் தாம் அதாவுல்லாவையும்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## சங்கரியை தலைமைப் பதவியைவிட்டு நீக்க அம்பாறை கூட்டணிக் கிளை தீர்மானம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி உடனடியாக தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும். அல்லது அவரைப்பதவியிலிருந்து விலகுவதற்குத் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் மத்தியசெயற்குழுபொதுச் சபையைக் கூட்டி நடவடிக்கைஎடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது. (25)

அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கூட்டம் ஆலையடி வேம்பு கலாச்சார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் கூட்டணியின்கிராமிய பிரதேசமட்டத்தலைவர்கள் மக்களென ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## இ.த.அ. வரைவு தொடர்பாக கொழும்பில் கருத்தரங்கு ஏற்பாடு

(திருமலை)

விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை வரைவு தொடர்பான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கருத்தரங்கொன்றை கொழும்பில் இன்று நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் நிலைப்பாட்டை வெளியிடவுள்ளனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் அதன் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் கருத்தரங்கில் பங்குபற்றி உரையாற்றவுள்ளார். இதன்போது இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனை திட்டத்தை நியாயப்படுத்தி தனது உரை அமையும் என்று தெரிவித்துள்ளார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைத் திட்டத்தை நிராகரிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்பதை தமிழர் அரசியல் வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு தனது உரை அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

## 29வது தேசிய விளையாட்டில் தமிழ் மூற்றாகப் புறக்கணிப்பு

(கொழும்பு)

குருநாகல் வெலகெதற சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் ஒலிபரப்புக்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றது. அறிவித்தல்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே அறிவிக்கப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களிலும் தமிழ் மொழிஇல்லை.

இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளிலிருந்து பெருமளவு வீரர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டியில் தமிழ்மொழி முற்றாக மறுக்கப்பட்டமையால் பெரிதும் அசௌக

(8ஆம் பக்கம் பார்க்க...)

## சிறிலங்காப் பிரதம நீதியரசர் மீது குற்றப்பத்திரிகை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மீதான குற்றப் பத்திரிகையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் ஆறாம் திகதி நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்தில் பிரதம நீதியரசர் சம்பந்தமான விடயமும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்கள் தொடர்பாக விளக்கத்தைக் கோரி சனாதிபதி சமர்ப்பித்த மனுவையிட்டு உயர் நீதிமன்றம் ஆராய்கையில் பிரதம நீதியரசர் கடைப்பிடித்த நடைமுறைகள் நாட்டின் பாதுகாப்பிற்குப் பெருமளவு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்கம் கருதுகிறது. பாராளுமன்றத்தினதும் உயர்நீதி மன்றத்தினதும் அதிகாரங்கள் சம்பந்தமாக முன்னாள்சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் முன்னர் அறிவித்த தீர்மானத்தை பிரதம நீதியரசர் மீறியுள்ளார் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## இனப்பிரச்சினைத் தீர்விற்குப் பாலமாக புலிகளின் இ.த.அ. வரைவு அமைகின்றது

### கூட்டமைப்பு பா.உ. இரா. சம்பந்தன்

(திருமலை)

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைத் திட்டமானது இலங்கைத் தமிழர் வரலாற்றில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யோசனைத் திட்டமாக அமைகின்றதென தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்பதற்குரிய பாலமாக இந்த யோசனைத் திட்டம் அமைகிறது. விடுதலைப் புலிகளின் யோசனைத்திட்டத்தை அனைவரும் யதார்த்தமாக சிந்தித்து ஆராய்ந்து செயலாற்ற வேண்டிய நேரம் வந்து

(8ஆம் பக்கம் பார்க்க...)

## பாக்தாத்தில் அமெ. உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதில் 15 அமெ. படையினர் பலி

### மேலும் 25 படையினர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் பாக்தாத் விமான நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்த அமெரிக்க இராணுவ உலங்குவானூர்தி ஒன்று நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது உலங்குவானூர்தியில் பயணம் செய்த அமெரிக்கப் படையினரில் 15 பேர் கொல்லப்பட்டதோடு 25 பேர் காயமடைந்துள்ளனர்.

விடுமுறையில் செல்வதற்கிருந்த 57 படையினரை இரண்டு சீனோப் உலங்குவானூர்திகள் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வேளை சலூஜாவுக்கு அருகே இவற்றின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அவற்றில் ஒன்று சூடுபட்டு நிலத்தில் வீழ்ந்ததாகவும் நேரில் பார்த்த ஈராக்கிய மக்கள் கூறியதாக சர்வதேச செய்தி ஏஜன்சிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அதே இடத்தில் இராணுவ வாகன தொடரணி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் குறித்து பொதுமக்கள் வீதிகளில் சந்தோசம் கொண்டாடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள உலங்குவானூர்தி

## வட-கிழக்கு இணைப்பை சனாதிபதி நீக்க வேண்டும் பேச்சுவார்த்தையிலிருந்து அரசு விலக வேண்டும்

### சிஹல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பை சனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ரத்துச் செய்ய வேண்டும் என சிஹல உறுமய கேட்டுள்ளது.

இந்த இணைப்பை ரத்துச் செய்வதன் மூலமே தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள தமிழீழப் பிரிந்துரையைத் தோற்கடிக்க முடியும் என அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. காவற்றுறை, வரி என்ற பல கோரிக்கைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்ட வரைவு தொடர்பாக அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது. அந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் தமது நிலைப்பாட்டையும் அரசாங்கம் வெளியிட வேண்டும் எனவும் சிஹல உறுமய கோரியுள்ளது. இந்த நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகளின்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## வரி விளம்பரம்


*தட்டெழுத்தாளர்*
*சுருக்கெழுத்தாளர்*
*தேவை*

ஜெயபுரத்தில் உள்ள இளமுருகன் நிழற்படப்பிரதியாக்கல் தட்டச்சு நிறுவனத்திற்கு மேற்படி அனுபவமுள்ள ஒருவர் தேவை. 15-11-2003 முன் தொடர்பு கொள்ளவும். (சம்பளம் நேரில்) நிர்வாகி. (3134)


## விபத்தில் 23 பேர் காயம்

இரத்தினபுரிக்கும் எம்பிலிப்பிட்டிக்குமிடையே தனியார் பயணிகள் பேருந்து ஒன்று பாதையைவிட்டு விலகி மின் சாரக்கம்பத்துடன் மோதி தடம்புரண்டதில் 23 பயணிகள் காயமடைந்துள்ளனர். நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது. வேகமாகச் சென்ற பேருந்தின் சாரதியினால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மக்களைத் திணறடிக்கும் கிரவல் மண் புழுதி

மாங்குளம் - துணுக்காய் பிரதான வீதிகள் கடந்த காலங்களில் உடைந்தும், குன்றும் குழியுமாக சீரற்ற நிலையில் காணப்பட்டது. தற்போது சமாதானச் சூழலில் இப்பிரதான சாலைகள், வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ் வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டையும் மீறி வாகனங்கள் செல்வதின் காரணத்தினாலும் மாங்குளம் இருந்து துணுக்காய் கல்விளான் வரையும் தங்கள் தேவைக்கென செல்லும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதில் துணுக்காய் பிரதேசத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்திய மருந்தகம், பாடசாலை எனவும் மக்களும் மாணவர்களும் அரச உத்தியோகத்தர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள செல்லும் வீதிகளில்வரும் வாகனங்கள் அள்ளி வீசும் கிரவல் மண்புழுதிகள் மக்களைத் திணறடிக்கச் செய்கின்றது. (24)

# 34 பொருட்களுக்கு அரசு கட்டுப்பாட்டு விலை விதிப்பு

34 பொருள்களை இம்மாதம் 1ஆம் திகதி தொடக்கம் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதை மீறுவோர்கள் கடும் தண்டனை விதிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொருட்களின் விபரங்கள் பின்வருமாறு. பால்மா, கட்டிப் பால், குழந்தைகளின் உணவு வகைகள், பிஸ்கட், இனிப்புக்கள், பட்டர், ரின்களில் அடைக்கப்பட்ட ஜாம், கோடியல், ஜெலி, மாமலேட், யோகட், ஐஸ்கிறீம், மாஜரின், ஈஸ்ட், சட்னி வர்க்கங்கள், அச்சாறு, சோஸ், குளிர்பானங்கள், மீன்ரின், தேயிலை, கோப்பித்தூள், ரின்னில் அடைக்கப்பட்ட இறைச்சி வர்க்கங்கள், மீன்வர்க்கங்கள், சாப்பாட்டு எண்ணெய் வர்க்கங்கள், மிளகாய்த்தூள், கொத்தமல்லி, சரக்குத்தூள், பூடு மஞ்சள், கட்டடங்களுக்குப் பாவிக்கப்படும் வர்ணங்கள், வார்னிஸ், மருந்து வகைகள், ரசாயன மருந்து வகைகள், பசளைகள், விட்டமின் குளிசை வர்க்கங்கள், சீமெந்து இவைகள் அனைத்தும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும் என அரசு வர்த்தமானியில் அறிவித்துள்ளது. கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்தால் உடன் அறிவிக்கப்பட வேண்டும்.


## 13ஆம் ஆண்டு நீளும் நினைவுகள்

### ஆறுதல் அளிக்கும் அன்பு முகம்

தாய் மடி முத்தாக

18 • 04 • 1969



தாய் மண் வித்தாக

03 • 11 • 1990

# மேஜர் சஞ்சிகா

சுந்தர்ராஜ் கலைச்செல்வி
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

உயிரின் திசுக்களில்
உள்ளார்ந்து துடிப்பவள்

காலமகள் கைகோர்த்து கடினவழி நடந்தோம்!
துடிக்க வைக்கும் இடர்களால் துன்ப நிலை அடைந்தோம்!
மனம் ஆற.... எங்கள்... உயிர் ஆற - உந்தன்
பூமுக நினைவே; எமக்குப் புன்னகைப்பால் வார்த்ததம்மா!
தாய் மண்ணின் விடியலுக்கு தலைவன் வழி போராடி,
தருந்தவளாய் களம்பல கண்டு...காவியமானவளே!
உயிரின் திசுக்களில் நில்லாது உள்ளார்ந்து துடிக்கிறாய்!
எம்முன் நீவந்து தினமும் அன்பு கீதம் படிக்கிறாய்!
உன்னை அணைக்க நீளும் எம் கரங்கள்....
வணக்கப் பூக்களைச் சொரிகுதம்மா!!!...

தற்போதைய முகவரி:
இல. 115 பாலிநகர்,
வவுனிக்குளம். (3142)

குடும்பத்தினர்.



# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் - 2003

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை மீளப்பெறாதோர் பின்வரும் அட்டவணைக்கிணங்கத் தமக்கு வசதியான ஏதாவதோரிடத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம் என நிதித்துறை அறிவித்துள்ளது.

21-11-2003 (வெள்ளி)

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீசுப்பிரமணிய மகாவித்தியாலயம் | : புதுக்குடியிருப்பு | பிற்பகல் 03.00 மணி | - பிற்பகல் 03.30 மணி |

22-11-2003 (சனி)

| | | | |
|---|---|---|---|
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | : புளியங்குளம் | காலை 08.00 மணி | - காலை 09.00 மணி |
| விடத்தல்தீவு றோ.க.பாடசாலை | : விடத்தல்தீவு | பகல் 12.30 மணி | - பகல் 12.45 மணி |
| கருங்கண்டல் றோ.க.பாடசாலை | : கறுக்காய்க்குளம் | பிற்பகல் 02.00 மணி | - பிற்பகல் 02.30 மணி |
| மல்லாவி மத்திய கல்லூரி | : மல்லாவி | பிற்பகல் 04.30 மணி | - பிற்பகல் 05.00 மணி |

23-11-2003 (ஞாயிறு)

| | | | |
|---|---|---|---|
| வேம்பொடுகேணி அ.த.க.பாடசாலை | : பளை | காலை 08.00 மணி | - பகல் 11. மணி |
| கிளி. மத்திய கல்லூரி | : கிளிநொச்சி | பிற்பகல் 03.00 மணி | - பிற்பகல் 03.30 மணி |

குறிப்பு: பளை, புளியங்குளம் ஆகிய இடங்களிற்கு வருபவர்களுக்கு நுழைவாயிலருகே ஊர்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


# தனி அரசுக்கான அத்திவாரத்தை இடைக்கால நிர்வாகம் உருவாக்கியுள்ளது

## ஜே.வி.பி. கருத்துத் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜே.வி.பி. தன்னுடைய பலமான எதிர்ப்பை அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது. இடைக்கால நிர்வாகம் தனி அரசை அமைப்பதற்கான அத்திவாரத்தை உருவாக்கியுள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

என்ன தேவையோ அதைப் பெறுவதற்கான முழு அதிகாரத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் பாவித்துள்ளதாகவும், அரசாங்கம் அதை வழங்குவதற்கு ஆபத்தானதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் இத்திட்டம் ஒருவழித் திட்டமெனவும், சிங்கள-முஸ்லிம் மக்களுக்கு இதனால் எதுவித நன்மையும் கிடையாது என விமல் வீரவன்ச தெரிவித்தார்.


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.11.2003ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த.(உ/த) அல்லது க.பொ.த.(சா/த) உடன் ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003 காலை 10.00 மணி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், பாழ்சாலை, கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி-8691)



கிளி/மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

# மரவேலை, வானொலி, தொலைக்காட்சி திருத்துதல், வீட்டு மின் இணைப்பு தொழில் சார்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

- *மேற்படி பயிற்சி நெறிகளுக்கு, 8ஆம் வகுப்பு வரையாவது கற்றிருத்தல் வேண்டும்.*
- *பயிற்சிக் காலம் : 6 மாதம்*
- *வயது : 18–40 இடைப்பட்டது.*

*மரவேலைப் பயிற்சி நெறிக்கு மட்டும் மாதாந்தம் இரண்டாயிரம் (2000 /= ) ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும்.*

- *பயிற்சி நெறிகள் பகுதி நேரத்தில் நடைபெறுவதால், வேலைக்குச் செல்வோரும் விண்ணப்பிக்கலாம்.*

*விண்ணப்பப்படிவங்கள் யாவும், சுயமாக தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 15–11–2003இற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

முகவரி:
**அதிபர்,**
**தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,**
**கிளிநொச்சி.**

(சி-8711)

# சதாம் ஈராக்கை விட்டு வெளியேறவில்லை
# வார இறுதியில் தாக்குதல்களுக்கு முயற்சி!

### -அமெரிக்க நிர்வாகி போல்பிரேமர் கருத்து.

சதாம் ஹுசைன் இன்னமும் ஈராக்கில் தான் இருக்கின்றார் என அமெரிக்கா வலியுறுத்திக் கூறியுள்ளது.

ஈராக்கில் இருக்கும் சதாமைப் பிடித்துச் செல்வது தான் இன்று முக்கிய விடயமாக இருக்கிறது. என ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல்பிரேமர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா உள்ளிட்ட படைகள் அல்லது' ஈராக்கிய பொலிசார் கொரில்லாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் கெரில்லாக்கள் மீண்டும் தாக்குதல்களை நடத்தலாம் என்றும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

எனினும், ஈராக்கியர்களிடம் நிர்வாகத்தை அளிப்பதற்கான செயற்பாட்டை அமெரிக்கா தலைமையிலான கூட்டணி விரைவுபடுத்தும் என்றும் வலியுறுத்தினார்.

இது இவ்வாறிருக்க ஈராக்கில் இவ்வார இறுதிப்பகுதியில் பெரியளவிலான கெரில்லா தாக்குதல்கள் இடம்பெறலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



அமெரிக்க சட்டத்துறை அலுவலககட்டடத்துள் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் துப்பாக்கிகளுடன் சோதனைச்சாவடியைக் கடந்து சென்றதாக அறிந்த வாஷிங்டன் நகரப் பொலிசார் கட்டடத்தை முற்றுகை இடுகின்றார்.

# சனாதிபதி புஷ் பங்கேற்ற வைபவத்தில் பரபரப்பு!

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் புஷ் கலந்துகொண்ட வைபவம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த கட்டடத்தினுள் தனது காரை முட்டிமோதிய பெண் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புஷ் இவ் வைபவத்தில் உரையாற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறத் தயாரான வேளை தனது 02 பிள்ளைகளுடன் காரைச் செலுத்திச் சென்ற பிச்சனா மிக்ஷன் (21-வயது) என்ற பெண் பொலிசாரின் கட்டுப்பாட்டையும் மீறிக் காரைக் குறிப்பிட்ட கட்டடத்துடன் மோதியுள்ளார். உடனடியாக அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். குண்டுகள் ஏற்றப்பட்ட கார்தான் இக் கட்டடத்தில் மோதுகிறதென அச்சம் அடைந்து அவ்விடத்தில் நின்ற மக்கள் சிதறி ஓடிய போது அங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதுவோர் விபத்து எனப் பின்னால் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானத் திட்டத்தைப் புதுப்பிக்க பலஸ்தீனப் பிரதமர்விருப்பம் வெளியிடுகை!

### அமைச்சரவை அமைக்கவும் ஏற்பாடு

அமெரிக்கா ஆதரவிலான மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை புதுப்பிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனைச் சந்திக்க பலஸ்தீனப் பிரதமர் அகமத் குரே விருப்பம் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன அமைச்சரவை ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பாகவும் யசீர் அரபாத்துடன் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட பிரதமர் தற்போது பதவியிலுள்ள அவசரகால அமைச்சரவைக்குப் பதிலாக புதிய அமைச்சரவை ஒன்றை அமைக்க முயற்சி செய்து வருகிறார்.

அவசரகால அமைச்சரவையின் பதவிக்காலம் நாளையுடன் முடிவடைகின்றமை தெரிந்ததே.



18 பேர் உயிரிழக்கவும் 2600 வாழ்விடங்களை இழக்கவும் காரணமாகிய கலிபோனியாவின் காட்டுத்தீ விபத்தில் சேதமடைந்த கார்.

# ஈரான் அணுவாயுத விவகாரம் குறித்து பிரிட்டிஷ் பிரதமரின் கருத்துக்கு அதிருப்தி

(தெஹ்ரான்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக ஈரான் அரசு அந்நாட்டிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரை வெளிநாட்டமைச்சு அலுவலகத்திற்கு அழைத்து தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

பிளேயர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் ஈரான் யுத்தத்தின் போது உலக நாடுகள் தெரிவித்த கருத்துக்களை கவனத்திலெடுத்து ஈரானில் அணுவாயுத உற்பத்தி இடம்பெறுகிறதா என்பதை கண்காணிக்கச் சென்றுள்ள ஐ.நா அதிகாரிகளோடு அந் நாட்டு மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றன என கூறியிருந்தால் இதனையடுத்து ஈரானில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அந் நாட்டு வெளிநாட்டு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு பிளேயரின் கருத்துக்கள் யதார்த்தத்திற்கு முரணானவையெனக் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கை ஆக்கிரமித்தது தொடர்பாக எழுந்துள்ள உலக அபிப்பிராயத்திற்கு பதில் அளிப்பதிலிருந்து தப்பிக்கொள்வதற்காக பிளேயர் போலிக் காரணங்களை வெளியிடக் கூடாதென பிரிட்டிஷ் தூதுவரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது

# பெரும் இயற்கை அழிவுகளை கலிபோர்னியா எதிர்கொள்ளும்

### -விஞ்ஞானிகள் எச்சரிக்கை


கலிபோர்னியாவில் காட்டுத்தீ தணிந்துள்ள போதிலும், இனிக் கடும் மழையை அம் மக்கள் எதிர்நோக்கவுள்ளனர்.

புவியியல் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கையில் காட்டுத்தீ காரணமாக ஏற்பட்ட சாம்பல் ஏனைய பொருட்கள் என்பன நிலத்தில் வீழ்ந்துள்ளமையால் வெள்ளம் பாய்வதற்குத் தடைகளை ஏற்படுத்தும் என்பதால் பெரும் வெள்ளமும் மண்சரிவும் ஏற்படக் கூடியவாய்ப்பு இருப்பதாகக் கூறியுள்ளனர்.

# இரு பலஸ்தீனர் சுட்டுக் கொலை!

பலஸ்தீனர் இருவர் இஸ்ரேலியப் படையினரால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மேற்குக் கரைப் பகுதியில் போடப்பட்டுள்ள வீதித்தடைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் வந்த பலஸ்தீனப் பொலிசார் ஒருவர் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் காஸாப் பகுதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜப்பானிய சட்டவாளர்களால் வரவழைக்கப்பட்ட திபெத்தின் மதகுரு தலைலாமாவை ஜப்பானிய நலன்புரி நிலையத்தினர் வரவேற்கின்றனர்.

# கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வெற்றிவாய்ப்பு கிட்டாது

இங்கிலாந்தில் எதிர்க்கட்சியாக உள்ள கன்சர்வேட்டிவ்கட்சியின் தலைமைப்பீடத்தை மாற்றினாலும் இம்முறை இங்கிலாந்தில் நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கன்சர்வேட்டிவ் கட்சித்தலைவர் இயன் டங்கன் ஸ்மித்கட்சித்தலைவர் பதவியிலிருந்து கடந்தவாரம் நீக்கப்பட்டு முன்னைய அமைச்சரான மயிக் கல்ஹோர்ட் தற்பொழுது தலைமைப்பதவிக்கு நியமிக்கப்பட உள்ளார். இம்முறை கன்சர்வேர்ட்டிவ் பொதுதேர்தலில் தோல்வி அடைந்தால் ஹோர்ட் கட்சி பதவியிலிருந்து விலக வேண்டிவரும் என அரசியல் ஆய்வாளர் [illegible] போல்கெலி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க சிறையில் சித்திர வதை

அமெரிக்காவில் தங்கியிருந்த போது பயங்கரவாத சதித்திட்டங்களை தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பலஸ் தீன பேராசிரியர் சமி அல்ஏரியன் தான் சிறையில் பல இம்சைகளுக்கு உட்பட்டதாக கூறியுள்ளார்.

பலஸ்தீன இஸ்லாமிய குழுவான ஜிகாத்திற்கு பணமும் ஆதரவும் வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு பேராசிரியர் அல் ஏரியனும் மற்றும் மூன்று அரேபியர்களும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிகளுக்கு சிமோன் பெரஸ் பாராட்டு

பலஸ்தீன பிரதமர் அகமத் குரேயை இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் சிமோன் பெரஸ் பாராட்டியுள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் இருநாடுகளுக்குமிடையில் இணக்கம் ஏற்பட வேண்டுமெனவும் மத்திய கிழக்கில் சமாதானம் நிலவ வேண்டுமெனவும் அகமத் குரே வற்புறுத்திவருவதாக அவர் கூறியுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட இஸ்ரேலிய பிரதமரின் 8 ஆவது ஆண்டுஅஞ்சலி நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் பலஸ்தீன பிரதமரை "ஒருசெயல் வீரர்" என வர்ணித்துள்ளதுடன் அவருடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது இலகுவான விடயம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஈராக்கில் அமெரிக்க வீரர் பலி

ஈராக்கில் கடந்த வெள்ளியன்று ஒரு அமெரிக்க இராணுவ வீரரும் ஈராக்கிய பொலிசார் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். புஷ் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ள இவ்வேளையில் பிரச்சாரக்கூட்டங்களில் ஈராக் விவகாரமே முக்கிய இடத்தைப் பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஈராக்கில் இவ்வாரம் தற்கொலைக்குண்டுத்தாக்குதலால் 35 பேர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து இவ்வாறான தாக்குதல்கள் அதிகரிக்கப்படலாமென வெளிநாட்டு அரசாங்கங்கள் எச்சரிக்கை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீபாவளி கொண்டாட்டத்தில் பிரிட்டிஷ் பிரதமர்

பிரிட்டனில் இந்து சமுதாயத்தினருடன் இணைந்து தீபாவளி கொண்டாட்டத்தில் ஈடுபட்டார் பிரிட்டிஷ் பிரதமர் ரோனிபிளேயர்.

லண்டன் பொதுச்சபையில் இந்து சமுதாயத்தினரால் தீபாவளி கொண்டாடப்பட்டது. இதில் பங்கு பற்றிய ரொனிபிளேயர் குத்துவிளக்கு ஏற்றினார். சுமார் 100 ற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் 400ற்கும் அதிகமான விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.



பதவியிலிருந்து ஓய்வு பெறும் மலேசியப் பிரதமர் மகதீர் முகமது வெள்ளியன்று கோலாலம்பூரில் நடைபெற்ற வழியனுப்பு நிகழ்வில் வரவேற்கப்படுகின்றார்.

# கதிர்காமரின் சிங்கள உரை அவர் சனாதிபதி வேட்பாளராவதற்கு அறிகுறியா?

1982 ஆண்டு நடந்த சனாதிபதி தேர்தலின் போது "சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு நாட்டை ஒப்படையுங்கள், கொப்பேகடுவாவை சனாதிபதியாக்குங்கள்" என்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சுலோகமாக இருந்தது 2005ஆம் ஆண்டு நடக்க இருக்கும் தேர்தல்களிலும் இந்தப் பாட்டை மீண்டும் பாடப்போகிறார்கள். ஆனால் 2005ஆம் ஆண்டு சந்திரிகாவுக்கு சனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது இப்பொழுது வரும் பாடல் "சந்திரிகாவுக்கு நாட்டை ஒப்படையுங்கள், ஆனால் காலியாகப்போகும் சனாதிபதியின் இடத்திற்கு யாரை நியமிப்பது" என்பதாகும். ஏன் அநுரா பண்டார நாயக்கா இருக்கிறார்? இல்லையேல் ராஜபக்ஷ இருக்கின்றார்? ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர்? எவர் எப்படி கணிப்பீடு செய்தாலும் கட்சியில் சனாதிபதி அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் சந்திரிகாவின் கைகளில் உள்ளது. ஆனால் அவர் யாரை தேர்ந்தெடுக்கப்போகிறார். என்பது 24ஆம் திகதி நடைபெற்ற அரச எதிர்ப்புப் போராட்டத்தில்



தெரிந்து கொண்டார். அவர் பத்து லட்சம் மக்களைப்போராட்டத்தில் இணைத்து தனது பலத்தை காண்பிப்பதற்கு முயற்சிசெய்தார். ஆனால் அவர் எதிர்பார்த்த "ஜயசேனா" மக்கள் தொகை வரவில்லை. அவர் எதிர்பார்த்தது ஒன்று நடந்தது ஒன்று. மக்கள் போராட்டத்திற்கு வரவில்லை. ஆனால் புதுமையானதொரு சம்பவம் அங்கு நடந்தது என்னவென்றால் லக்ஷ்மன் கதிர்காமர் "ஜயசேனா" மக்கள் மத்தியில் சிங்களத்தில் உரை நிகழ்த்தியதே ஆகும். கதிர்காமர் கதைத்தது பெரியசாதனை அல்ல, ஆனால், அன்று மக்கள் மத்தியில் ஆதரவை எதிர்பார்த்தவர்களுக்கு இவரின் பேச்சு பெரிய அதிர்ச்சியைத் தந்துள்ளது. எப்படி ஜயசேனா ஜயோ நன்றாக நடைபெற்றது. என்ன ஜயசேனாவில் நடந்தது ஜயோ கதிர்காமர் சிங்களத்தில் உறையாற்றியது. பெரிய விந்தையாக உள்ளதே, ரோக் ஒப்தவுண் அதாவது தலைநகரில் சொற்பொழிவு அதாவது அவர் சிங்களத்தில் உரை நிகழ்த்தியமைபற்றியே கொழும்பு வாழ் மக்களிடத்திலும் கிராமிய மக்களிடத்திலும் பரவலாகப் பேசப்பட்டது. அதாவது கதிர்காமர் தானும் கட்சியின் சார்பில் சனாதிபதி தேர்தலுக்கு தயார் என்பதை அவரின் சொற்பொழிவிலிருந்து தெரிய வந்துள்ளது. இதற்கு சந்திரிகா சம்மதிப்பாரா? சந்திரிகா எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு காரணங்கள் கிடையாது ஆனால் சந்திரிகா பாதுகாக்கப்படல் வேண்டும்.

கதிர்காமர் ஒரு அரசியல் தலைவரோ அல்லது அரசியலில் பிரவேசத்திலிருந்து? தலைவராகுவதற்கு தகுதியானவரோ அல்ல. இது சந்திரிகாவுக்கு நன்றாக புலப்படுகின்றபடியால் கதிர்காமர்சனாதிபதியானால் தனது கட்சித்தலைமைக்கு அவரால் ஆபத்து ஏற்படாது கதிர்காமர் சனாதிபதி ஆகிவிட்டாலும் சிறிலங்கா சுதந்திக் கட்சியில் தானும் ஒரு நாயகனாக நடித்து கொண்டு செயற்படுவாரானால் அது சந்திரிகாவுக்கு எந்த விதத்திலும் ஆபத்தை உண்டு பண்ணாது. எல்லாவற்றையும் விட அவர் ஒரு சிறுபான்மை இனத்தவராகும் ஆனபடியால்அவருக்கு கட்சித் தலைவராகவும் முடியாது. நாட்டின் சனாதிபதியாகவும் முடியாது. ஆனபடியால் தான் தனது பாதுகாப்பிற்கு கதிர்காமரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். சந்திரிகாவுக்கு அநுரா பண்டார நாயக்கா, மகிந்த ராஜபக்ஷ ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களில் நம்பிக்கை கிடையாது. நம்பவும் முடியாது. சிறிமாவோ பண்டார நாயக்க அம்மையார் தனது உறவினரான கொப்பேகடுவவை அரசியலுக்கு கொண்டுவந்தார். கடைசியில் சிறிமாவோ அம்மையார் அவரையும் நம்பவில்லை எனவே அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு யாரைக்கட்சியின் சார்பாக நிறுத்துவது? கட்சியில் தற்பொழுது அவர் யாரையும் நம்பத்தயாராக இல்லை.

1982ஆம் ஆண்டு கொப்பேகடுவ சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபொழுது அவரின் சுலோகம் என்னவெனில் தான் இம்முறை சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வென்றால், ஐக்கிய தேசியக் கட்சியினரால் பறிக்கப்பட்ட சிறிமாவோ அம்மையாரின் குடி உரிமையை மீண்டும் பெற்றுக் கொடுப்பேன் என்று தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். பின் அவர் சனாதிபதித் தேர்தலில் மக்கள் எல்லோரும் தன் பக்கம் உள்ளார்கள், தன்னைச் சுற்றியே வலம் வருகின்றனர். என்று நினைத்து நாட்டை சீர்திருத்துவதற்கு முயற்சித்தார்.

இடது சாரி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.கடைசியில் அந்தத்தேர்தலில் சிறிமாவை ஓரம் கட்டிஅவர் சுதந்திரக் கட்சி தலைவி என்பதை மறந்து செயற்பட்டார். இவைகள் எல்லாம் சந்திரிகா அம்மையாருக்கு நன்றாகத் தெரியும், அடுத்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடாவிட்டால், கட்சியின் சார்பில் எவரை நிறுத்துவது என்பதை நன்கு ஆராய்ந்தால் அதற்கு கதிர்காமர்தான் தகுதியானவர்.

அடுத்தவிடயம் கதிர்காமர் என்ற குதிரை இந்த ஓட்டப்பந்தயத்தில் வெல்லுமா? ஆனால் இந்த ஓட்டப்பந்தயத்தில் குதிரை வெல்லுமா? அல்லது தோல்வி அடையுமா? குதிரை வென்றாலும் தோல்வி அடைந்தாலும் இரண்டும் ஒன்றுதான். சந்திரிகாவின் முழு எதிர்பார்ப்பும் தான் கட்சித் தலைவிப் பதவியில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

1959ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்ட பொழுது கதிர்காமர் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டு இருக்கும் பொழுது மாணவர் சங்கத்தால் பண்டாரநாயக்கவைப் பற்றி விரிவுரை ஆற்றுவதற்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. பண்டாரநாயக்க ஓர் இனவாதி என்றும் தமிழருக்கு எதிராக வன்செயல்களைத் தூண்டிவிட்டப்படியால் அவருக்காக விரிவுரை ஆற்ற முடியாதென அப்பொழுது அவர் அந்த வேண்டுகோளை நிராகரித்தார். பொதுசன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பண்டாரநாயக்க நினைவு தினத்தில் கதிர்காமர் இதைத் தெரிவித்தார். இன்று அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். எனவே அ்வர் நன்றிக்கடனாக சந்திரிகாவுக்கு தனது. ஆதரவைக் கொடுத்தே ஆக வேண்டும். பொதுசன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் சத்தியப் பிரமாணம் செய்துபின் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்றார், அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலஞ் சென்ற காமினி திசாநாயக்க கதிர்காமர் வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் எனக் கூறினார். ஏனென்றால் தமிழர் ஒருவர் வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்றால் இங்குள்ள சிறுபான்மை இன தமிழ்களின் பிரச்சினையை வெளிநாட்டவர்களுக்கு எடுத்துக் கூறினால் வெளிநாட்டவர்கள் இவரின் பேச்சை நம்புவார்கள் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி அன்று நினைத்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி சனாதிபதிப் பதவிக்கு தமிழர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் என்ன நடக்கும்? அப்படி ஏற்பட்டால் சிங்கள இனவாதிகள் என்ன செய்வார்கள்? விடுதலைப் புலிகளுக்கு கதிர்காமர் எதிரானவர் ஆகவே அவரை ஏற்றுக்கொள்வார்கள்.சிறிலங்கா சுதந்திர கட்சியில் கதிர்காமர் எந்தப் பிரிவையும்



சேர்ந்தவர் அல்ல. எனவே அவரைக் கட்சி வேட்பாளராக நியமிப்பதில் கட்சியில் எதிர்ப்பு கிளம்பாது. இவைகள் எல்லாம் நன்கு உணர்ந்தவர் மங்களசமரவீர . அவர் எப்பொழுதும் சந்திரிகா அரசு வருவதையே விரும்புவார், மங்களசமரவீர சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரபல்யமானவர், அவருக்குக் கட்சியில் எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும் கட்சியின் ஊர்வலத்தில் செல்வதற்கு செல்வாக்குக்கிடையாது. இந்த ஊர்வலத்தில் செல்லும் கட்சியின் யானைகள் இவரின் கட்டளையை ஏற்காது என்பது மங்களசமரவீரவுக்குத் தெரியும். இந்த ஊர்வலத்தில் கதிர்காமர் என்ற யானையை மங்கள

**லங்கா தீப பத்திரிகையில்,**
**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**மொழியாக்கம் சக்திவேல்.**

சமரவீரவுக்கு கட்டுப்படுத்த முடியும். ஐக்கிய தேசிய முன்னணி அரசை கவிழ்த்து வரப்போகும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் பிரதமர் பதவியை கதிர்காமருக்கு கொடுப்பதற்கு மங்கள சமரவீர விருப்பமாக உள்ளார். இந்தப் பிரயாணத்தின் இறுதி முடிவு சந்திரிகாவின் தலைமைப் பதவியைப் பாதுகாப்பதே ஆகும். சந்திரிகா இந்தக் காட்டில் நதியில் விழாமல் எழும்பி வரமுடியும். அடுத்து வரும் தேர்தலில் கட்சி வென்றாலும் தோற்றாலும் சந்திரிகா கட்சியின் தலைவி என்பது உறுதி. சந்திரிகாவின் "ஜயசேனா" ஊர்வலத்,தில் கதிர்காமர் நடிகராவார். கதிர்காமர் ஜயசேனா ஊர்வலத்தில் சொற்பொழிவாற்றியதன் மூலம் தனக்கும் சிங்களம் தெரியும், அதனால் எனக்கு தலைவராக முடியும் எனக் காட்டியுள்ளார். எட்டுவருட காலமாக சிங்களத்தில் ஒரு வாக்கியமும் கதைக்காமல் இருந்த கதிர்காமர் "ஜயசேனா" ஊர்வலத்தில் சிங்களத்தில் கதைத்தது யாம் இருக்கப் பயம் ஏன் என சந்திரிகாவிற்கு உணர்த்துவதற்கே ஆகும். 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரைத் தெரிவு செய்வது சூதாட்டத்தில் பிணை வைப்பது யாரை என்ற கேள்வி எழும்பப்போகிறது.

---

# பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் குடியேறிய விவசாயிகள் பெரும் அவலம்

தென்மராட்சியிலுள்ள பாதுகாப்பு வலயப்பிரதேசங்களை அண்மித்து குடியேறியுள்ள விவசாயிகள் விவசாயப் பொருட்களைப் பெறுவதில் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்கு சில இடங்களை விவசாயம் செய்யப் படையினர் அனுமதித்திருந்தாலும் அந்நிலத்தை அண்மித்து குடியேறவும்,விவசாயப் பொருட்களை விற்பனை செய்யவும் படையினர் அனுமதிக்காமையால் தேவையான விவசாய பொருட்களான உரம், மற்றும் மருந்து வகைகளை பெறுவதற்காக சாவகச்சேரிப் பகுதிக்குவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதனால் இப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை கைவிடலாமென்ற நிலை தோன்றியுள்ள தாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (33)

---

# வலயக் கல்வித் திணைக்களம் மாங்குளத்தில் விரைவில் இயங்கும்

(மல்லாவி)

ஜெயசிக்குறு ராணுவ நடவடிக்கையினால் இடம் பெயுர்ந்து துணுக்காய் மல்லாவி பகுதிக்கு இடம் பெயர்ந்த வலயக்கல்வித்திணைக்களம் அதன்சொந்த இடமான மாங்குளத்தில் 2004ஆம் ஆண்டு இயங்கவுள்ளது. துணுக்காய் வலயத்தில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் பாடசாலைகளான மு/ ஒதியமலை அ.த.க. பாடசாலை, மு/ பெரியகுளம் அ.த.க பாடசாலை என்பன அடுத்த ஆண்டு முதல் சொந்த இடங்களில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. என துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கு. விஜயபாலா தெரிவித்துள்ளார்.

---

# அரசின் 2ஆவது வரவு-செலவுத் திட்டத்தில் 4விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படும்

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

எதிர்வரும் 12ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள ஐ.தே. முன்னணியின் இரண்டாவது வரவு செலவுத்திட்ட யோசனைகள் மூலம் நான்குவிடயங்களில்கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் படி அரச ஊழியர்களுக்குகணிசமான அளவு சம்பள அதிகரிப்பு, வேலையற்றோருக்கு வேலை வழங்குதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், நீண்டகால அடிப்படையில் நவீன வசதிகளைக் கொண்ட உட்கட்டமைப்பைநிர்மாணித்தல் என்பவை முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இவ்யோசனைகளின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளம் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும் எனவும் வேலையற்றோருக்கு வேலை வழங்கும் வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சிறிய, மத்தியதர கைத்தொழில்களை விருத்தி செய்யவும் கைவிடப்பட்ட கைத்தொழில்களை புத்துயிர் ஊட்டவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

---

# கட்டாக்காலி மாடுகளால் பயிர்ச்செய்கையாளர் கவலை

(அலுவலக செய்தியாளர்)

கட்டாக்காலிமாடுகளின் தொல்லை காரணமாக மேட்டுநிலப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

கிளி கனகபுரம் 8ஆம் 9ஆம் பண்ணை கிராமங்களில் இரவு,பகல் என்று பாராது வேலிகளை உடைத்துக்கொண்டு கட்டாக்காலி மாடுகள் மேட்டுநிலக்காணிகட்குள்சென்று பயிர்களை துவம்சம் செய்துவருவதன் காரணத்தினால் தற்போது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு வருபவர்கள் பெரும் கவலையடைந்து வருகின்றனர். (சோ)

---

# 'விழி' இதழ் வெளிவந்துள்ளது

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் நவம்பர் மாத 'விழி' மருத்துவ இதழ் பல்வேறு அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

கருப்பை இறக்கம், போசாக்கு குறைபாடு என்பது... ,குருதிச் சோகை..., நலன் காப்போம் தொடர் போன்ற சம்பவங்களைத் தாங்கி, இவ்விதழ் வெளிவந்துள்ளது.

# தென்பகுதியிலிருந்து தரகர்களால் எடுத்து வரப்படும் பாவனைக்குதவாத பொருட்கள் கண்டுபிடிப்பு!

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

**தென்பகுதியிலிருந்து வியாபார தரகர்களால் வன்னிப் பெரு நிலப்பரப்பிற்குள் எடுத்துவரப்படும்பாவனைக்குதவாத பொருட்களையிட்டு அவதானமாக இருக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இவ்வாறான பொருட்கள் சில கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது.**

தென்பகுதியில் இருந்து வன்னி பெருநிலப் பரப்புக்குள் வியாபார தரகர்களால் கொண்டு வரப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் உற்பத்தி திகதியோ அல்லது பாவனை முடிவுத்திகதியோ அற்ற நிலையில் உள்ளதை அவதானித்த முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் அப்பொருட்களில் பாவிக்க முடியாத காலாவதியான பொருட்களை கண்டுபிடித்து அழித்து அத்தரகர்களுக்கு எச்சரிக்கையும் செய்துள்ளனர்.

மேற்படி பொருள் வருகையில் பாவனைத்திகதி முடிவடைந்த பொருட்களுக்கு (ரபர்ஸ்ராம்) மாத திகதிகளை கூட்டி போலியான மாத திகதிகளை ஒட்டி பாவிக்கக் கூடிய பொருட்களின் நடுவில் வைத்து விற்பனை செய்வதுடன் சிறுபிள்ளைகளுக்கு மருத்துவ தேவைக்காக பாவிக்கப்படும் ஓமவாட்டர் போத்தல்களிலும் உற்பத்தி மற்றும் பாவனை முடிவுத்திகதி அற்ற நிலையில் விற்பனை செய்யப்பட்டதை அவதானித்த மேற்படி மாவட்ட சுகாதார சேவையினர் அதனைப்பரிசோதனை மேற்கொண்ட போது அவ் ஓமவாட்டர்கள் பழுதடைந்து மனித பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதால் அப்படியான பொருட்களையும் கண்டு பிடித்து அழித்து சுகாதார விழிப்புணர்வு கருத்துக்களை கூறிவருகின்றனர்

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தென்பகுதியில் இருந்து வரும் பொருடகளில் முக்கியமாக உற்பத்தி மற்றும் முடிவுத்திகதிகளை அவதானித்துக் கொள்வனவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது (ஆ)

## போ.ஐ.மு அழைப்பு

"இன்னும் இரு மாதங்களில் நாம் பொ.ஐ.மு அரசாங்கத்தை அமைப்போம். அவ்வரசாங்கத்தில் பொது நிர்வாக அமைச்சுப் பொறுப்பை வஜிர அபயவர்த்த னவுக்கு வழங்குவோம். அதனால் அவர் எமது கட்சியில் இணைய வேண்டும். அவர் என்னை ஐ.தே.க வுக்குள் வருமாறு அழைப்பு விடுக் கின்றார்.நான் அவருக்கு அழைப்பு விடுக்கிறேன்." இவ்வாறு தென் மாகாண அபிவிருத்தி சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட பாதை திறப்பு விழாவில் தென்மாகாண முதலமைச்சர் சிறிசேன கூறியுள்ளார்.

# கைத்தொழில் வர்த்தகம் சேவைகளுக்கான மதிப்பீடு

(அலுவலக செய்தியாளர்)

கைத்தொழில் வர்த்தகமும், சேவைகளுக்குமான மதிப்பீடுகள் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப் பெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இத்தகவல்கள் கைத்தொழில் வர்த்தகமும், சேவைகளும் நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கு மட்டும் உபயோகப்படுத்தப்படுமெனவும், இத்தகவல்களினை சேகரிக்கும் பொருட்டு கிராம உத்தியோகஸ்தர்கள் மேற்படி நிறுவனங்களுக்கு சமுகம் கொடுக்கவுள்ளனரெனவும் இத் தொகை மதிப்பு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு சரியான தகவல்களைத் தெரிவித்து பூரண ஒத்துழைப்பு நல்கிடும் வண்ணம் கிளிமாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# மல்லாவிப் பிரதேசத்தில் வருமுன் காப்பு நடவடிக்கை

(மல்லாவி)

மழை காலத்தில் வருமுன் காப்பு நடவடிக்கையாக சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினரால் பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், சந்தைகள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றில் சுகாதாரவிழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வரும் மழைகாலத்தில் நுளம்புப் பெருக்கம் வயிற்றோட்டம், பாம்புக்கடி ஏற்பட வாய்ப்புண்டு அத்துடன் குடிநீர் அசுத்தமாகக் கூடிய சந்தர்ப்பமும் அதிகம். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு எப்போதும் கொதித்தாறிய நீரை அருந்துமாறும் நுளம்புப் பெருக்கம் ஏற்படும் இடங்களில் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் மக்களை மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (24)

# படையினரால் எதிர் நோக்கப்படும் நெருக்கடிகளை ஆட்சேபித்து வெகுசன போராட்டங்களுக்கு முயற்சி

## வலி.வடக்கு தேசிய எழுச்சிப் பேரவை ஆராய்வு

வலிகாமம் வடக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் மானிப்பாயில் உள்ள கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

மாலை மூன்று மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் வாதவூரானின் தாயார் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஏற்றிவைத்தார்.

மேற்படி நிகழ்வில் வலிகாமம் வடக்குப்பகுதியில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளும் அவர்களின் சோதனைகள் தொடர்பாகவும் ஆராய்ந்ததுடன் இதற்கு எதிராக வெகுசன போராட்டங்களையும், ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் நடத்தவுள்ளதால் இதற்கான முழுமையான ஒத்துழைப்பை ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களூடாக செய்துதரப்பட வேண்டும் என அவ் உறுப்பினர்களிடம் வேண்டுகோள்விடுத்ததுடன் இதன் போது மக்களும் தங்களது பூரண ஆதரவைத் தர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் (33)

# புத்தளம் கல்வி வலயப் பாடசாலைகளில் 550 தமிழ்மொழி மூல ஆசிரியர் வெற்றிடம்

புத்தளம் கல்வி வலயத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் 550 ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.

புத்தளம்வடக்கு கோட்டக்கல்வி பிரிவு 152,தெற்கு151, கற்பிட்டி கோட்டக் கல்வி பிரிவு 226, ஆனமடுவ பிரிவு 02, பள்ளம பிரிவு 19, பேர்களுக்கான வெற்றிடங்கள் நிலவு கின்றன.

இதனடிப்படையில் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் 144, ஆங்கிலம் 101, கணிதம் 47, முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரைக்குமான மேற்பார்வை கடமை ஆசிரியர்கள் 41, ஆறாம் ஆண்டு தொடக்கம் பதினோராம் ஆண்டு வரையுமான மேற்பார்வை கடமை ஆசிரியகள் 41, விஞ்ஞானம் 37, வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கும் ஆசிரியர்கள் 29, வாசிகசாலைப் பொறுப்பாளர்கள் 18, கலைப்பட்டதாரிகள் 14, சித்திரம் 09, உடற்கல்வி, சமூகக்கல்வி மற்றும் வணிக பட்டதாரி ஆசிரியர்கள் தலா 06பேர் தேவைப்படுகின்றனர்.

புத்தளம் கல்வி வலயத்தில் 58 தமிழ்மொழி மூல பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நித்திரையிலிருந்த இளைஞரை நள்ளிரவு பாம்பு தீண்டியது!

முள்ளியவளைப் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.வெள்ளிக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டிருந்த 3ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த துரைராசா கஜன் (வயது20) என்ற இளைஞனுக்கே பாம்பு கடித்துள்ளது அவர்உடனடிஅவசரசிகிச்சைக்காகமுல் லைத்தீவு கட்டம் 02 மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டார். (ஆ)

### -உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள-

# ஆற்றுவாய்களை மக்கள் பாவனைக்கு விடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள ஆற்றுவாய்கள் மக்கள் பாவனைக்கு விடுமாறு அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற ஆற்றுவாய்கள் மீனவர்களின் படகுகளை கரை ஒதுக்குவதற்கு உகந்ததாகக் காணப்படுகின்ற போதிலும் அவை மக்களின் பாவனைக்கு விடப்படாமையால் புதிய ஆற்றுவாய்களைத் தோண்ட வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால் இதற்காக படையினரின் அனுமதி எடுக்க வேண்டிய சூழ்நிலையுள்ளதால் படையினருக்கும் மீனவருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட வேண்டிய நிலை காணப்படுவதைத் தொடர்ந்து இக் கோரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர். (33)

# வீதிகளின் இரு மருங்கிலுமுள்ள பற்றைகள் அகற்றப்படாமையால் அசௌகரியம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளிலுள்ள உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்பட்டுவரும் வேளையிலும் அவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள பற்றைக்காடுகள் அழிக்கப்படாதுள்ளமையின் காரணமாக , அவ்வீதியினூடாகப் பயணிக்கும் பாதசாரிகள் முதல் வாகன ஓட்டுனர்கள் வரை தினம் தினம் பெரும் அசௌகரியங்ளைக எதிர்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கிளி . கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து கணேசபுரம் ஊடாக குருகுலம் செல்லும் வீதி,மற்றும் கிளிநொச்சி கிருஸ்ணர் ஆலய முன்றலிலிருந்து கிளிநொச்சி பொதுச்சந்தைக்குச் செல்லும்வீதிகள் இரு மருங்கும் பற்றைக்காடுகளால் சூழப்பெற்று துப்புரவு செய்யப்பெறாதுள்ளமையின் காரணமாக இவ்வீதியூடாக பயணிப்பவர்கள் வாகனங்கள வீதியில் செல்லும் வேளையில் அதற்கு இடம் கொடுத்து கரைஒதுங்க முடியாது அவலப்படுவதனை காணக் கூடியதாகவுள்ளது.

இப்பற்றைக்காடுகள் அழிக்கப்படாதுள்ளதனால் இவ்வீதியில் வாகனவிபத்துக்கள் ஏற்பட வாய்ப்புருவாகி உள்ளதுடன் மழைக்காலத்தில் இரவு வேளையில் இவ்வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் பாம்புக் கடிக்கு இலக்காக வேண்டிய நிலை உருவாக சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இவ்வீதி இருமருங்கிலுமுள்ள மேற்படி பற்றைக்காடுகளை அகற்றி வாகன விபத்துக்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தடுப்பதற்கு அப்பகுதி மக்களுக்கு விதப்புரைகள் வழங்கி பற்றைக்காடுகளை அழிக்கநடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் விதப்புரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ)



கிளிநொச்சி கிருஸ்ணர் ஆலய வீதி முக்கிய சந்தியின் இருகரையிலுமுள்ள பற்றைக்காடுகள்.

# ராணுவ துருப்புக்காவி மோதி பொது மகன் படுகாயம்

யாழ்- காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ராணுவ துருப்புக்காவி மற்றும் உந்துருளி விபத்தில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இவ்வீதி விபத்தில் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்(வயது33) என்பவரே படுகாயமடைந்து போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.சம்பவத்தைத் தொடர்ந்து அவ்விடத்தைவிட்டு நகர முற்பட்ட மேற்படி துருப்புக்காவியை அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.தொடர்ந்து அவ் இடத்துக்கு வந்த பொலிசார் விபத்துக்குள்ளான ராணுவ துருப்புக்காவியையும், உந்துருளியையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் துருப்புக்காவியை ஓட்டிய ராணுவ சிப்பாயையும் பொலிசார் கைது செய்துள்ளனர். (33,27)

# ஆதார வைத்தியசாலையென்ற நிலையிலே வவுனியா பொது வைத்தியசாலை இயங்குகிறது!

### பணிப்பாளர் டாக்டர் செந்தில்காந்தன் தகவல்

வவுனியா பொது வைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்டும் ஆதார வைத்தியசாலை என்ற நிலையிலேயே இயங்கி வருவதாகவும் டாக்டர்களுக்கான பற்றாக் குறை நிலவிவருவதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் செந்தில்காந்தன் குறிப்பிட்டுள்ளார். அறுவை மருத்துவர், கண் அறுவை மருத்துவர், காது சம்பந்தமான மருத்துவர் போன்றோர் பற்றாக் குறையாக இருப்பதுடன் தாதிமார் தேவையில் 30 வீதமான தாதிமார்களே வேலை செய் வதாகவும் செந்தில்நாதன் மேலும் தெரிவித்தார். 37வைத்தியர்கள் வேலைசெய்வதாகவும் இன்னும் 10 வைத்தியர்கள் மக்களுக்கு சேவையாற்ற தேவைப்படுகிறனரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்பாட்டிற்குப் பின் கிளிநொச்சி,மன்னார் போன்ற இடங்களில் இருந்து அதிகளவு மக்கள் வைத்தியத்திற்கு வருவதால் பெரும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய எக்ஸ்ரே பிரிவு அறை அமைக்கப்படாததால் பழைய அறையிலேயே இன்னும் எக்ஸ்ரே எடுக்கும் பணிகள் நடை பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கமக்கார அமைப்பு அலுவலகம் முள்ளியவளையில் திறப்பு

முள்ளியவளை வடக்கு கமக்கார அமைப்பின் செயற்பாட்டுக் காரியாலயம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மேற்படி காரியாலயத் திறப்பு விழா அண்மையில் முள்ளியவளை வடக்கு கமக்கார அமைப்பு தலைவர் சு..அருளானந்தசிவம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கரைதுறைப்பற்று பகுதி உலக உணவுத் திட்ட முகாமையாளர் குருபரன் ஏற்றி வைத்ததையடுத்து காரியாலயக் கட்டடத்தினை சம்பிரதாய பூர்வமாக முள்ளியவளை கமநலஅபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி.இராசலட்சுமி நாடாவினை வெட்டித் திறந்து வைத்து ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து கருத்துரைகள் இடம் பெற்றன. மேற்படி நிகழ்வில் முள்ளியவளை விவசாய போதனாசிரியர், முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் மற்றும் அமைப்பு சார்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கான நன்றியுரையினை கமக்கார அமைப்பு செயலாளர் அ.தியாகராசா நிகழ்த்தினார். (ஆ)

# செக்கோ நிறுவன நிதியுதவியில் மீனவர்களுக்கு வலைகள் வழங்கல்

செக்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் வன்னி கியூடெக் நிறுவனம் முல்லை மீனவர்களுக்கு ஒரு தொகுதி வலைகளை வழங்கியது.

கடந்த 29ஆம் திகதி இந்நிகழ்வு முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயமுன்றலில் அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இதில் இத் திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை வன்னி கியூடெக் நிறுவனத் தலைவர் அருட் தந்தை றோய், கரைதுறைபற்று உதவி அரசாங்கஅதிபர் காசிப்பிள்ளை, ஹரித்தாஸ் வானொலி பிரான்ஸ் பிரதிநிதி, கியூடெக் கோவில் குடியிருப்பு பிரதிநிதி கிறிஸ்ரி பெனாண்டோ ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து முதற்கட்டமாக இறால் பிடிப்பதற்கான ஒரு தொகுதி வலைகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் செக்கோ நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி வெக்கோ, திட்டத்தின் செயற்பாட்டாளர்களான கற்றலின், பற்றிக், ஹரித்தாஸ் வானொலி பிரான்ஸ் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர் இதில் பெருமளவான மீனவர்களும் கலந்து கொண்டனர். (20)

## இயங்க வைக்க நடவடிக்கை

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள மயிலிட்டியில் காசநோய் ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வலிவடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.


# சிறந்த பயிர் வளர்ச்சிக்கு எல்லா ஊட்டச்சத்துக்களும் தேவை

துரித செயற்பாடுடைய
மண் வளம் பெருக்கி

Agricol's

அதிக விளைச்சலுக்கு
எல்லா ஊட்டச்சத்துக்கள் 12ம் தேவை

அதிக விளைச்சலைப் பெற என்.பி.கே (N.P.K) மட்டும் போதாது. கல்சியம்(ca) மக்னீசியம்(Mg) கந்தகம்(S) உடன் 6 சுவட்டு மூலகங்களும் போரான்(B) செம்பு(Cu) இரும்பு(Ni) பெரஸ்(Fe) மங்கனீஸ் (Mn) சிங்க்(Zn) ஆகியவை கட்டாயமாகத் தேவையென இந்திய தொழில்நுட்ப நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

30%-45% வரை

**மண்வளம் குன்றியுள்ளது:-**
**(1970-1975 காலப்பகுதியில் பெரும் விளைச்சல்)**

பல்லுப் போனால் சொல்லுப் போச்சு, மண் வளம் போனால் விளைச்சல் போச்சு ஆம் 1970-1975 காலப்பகுதியில் ஒப்பிடும் போது 30%-45% வரை விளைச்சல் குறைந்து இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன்னார் மாவட்டத்தில் அடம்பன்,உடயிலங்குளம், நானாட்டான், செம்மந்தீவு, (முருங்கன்) பகுதிகளில் 1970-1975 காலப்பகுதியில் CCC Paddy Basal (Mannar) சிசிசி நெல் கலவை (மன்னார்) இட்டபோது பல விளை நிலங்களில் 200 புசல் நெல் விளைந்ததை மறுக்க முடியாது. (12 1/2%N-12 1/2P) (Amipos Nickkiphos) அமிபோஸ் நிக்கிபொஸ் கலவை பாவித்த போது அதிக விளைச்சல் கிடைத்தது. ஆனால் இன்று மிகக் குறைவாகவே விளைச்சல் கிடைக்கின்றது. மண் வளம் குன்றியதே இதற்குக் காரணம்.

1. போதிய அளவு இயற்கை உரங்கள் (தாவர உரம்,எருவகை, கூட்டெரு) போன்றவற்றைப் பாவிக்கத் தவறியமை.
2. செயற்கை இரசாயன உரங்கள் (யூரியா,அமோனியா ,பொஸ்பேட்) போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்தமை மற்றைய காரணம்.

**1988 ஆம் ஆண்டு மண் பரிசோதனை**
**மக்னீசியப் பற்றாக்குறை**

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி,மன்னார் ஆகிய வயல் நிலங்களில் மண் பரிசோதனை செய்த போது மண்ணில் உவர்த்தன்மை,அமிலத் தன்மையுடன் மக்னீசியப் பற்றாக்குறையும் அநேகமான வயல் நிலங்களில் காணப்பட்டன.

**மக்னீசியம் சேர்க்கப்பட்ட உரக் கலவைகள் பாவித்ததால் அதிக விளைச்சல்**

இலங்கை உரக் கூட்டு ஸ்தாபனம் 1988,1989 ஆம் ஆண்டுகளில் வடமாகாண விவசாயிகளுக்கு(அனுராதபுரத்தில்) மக்னீசியம் சேர்க்கப்பட்ட ஜிப்சம் மண் வளமாக்கி 1. Gypsate (soil Conditioner) 2. Mg.S.யூரியா 3. Mgs. T.D.M ஆகிய உரக் கலவைகள் அதிக அளவு தயாரித்து அக்றிகோலஸ் மூலம் சந்தைப்படுத்தினார்கள். கிளிநொச்சி, பரந்தன், விஸ்வமடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விவசாயிகள் இவற்றைப் பாவித்துச் சிறந்த விளைச்சலைப் பெற்றனர்.

**மீண்டும் மண் பரிசோதனையில் இரும்புச் சத்துச் செறிவு**

2002 ஆம் ஆண்டு கிளிநொச்சி , மன்னார் ஆகிய இடங்களில் மண் பரிசோதனையில் மக்னீசியப் பற்றாக்குறையுடன் இரும்புச் சத்துச் செறிவு (iron-Toxide) அநேகமான மண்ணில் காணப்பட்டன. மண் ஆய்வு நிபுணர் மண் வளம் பெருக்கி அக்றிகோலாஸ்,ஜிப்சைற்-60 பிளஸ் ஐ பாவிப்பதற்குச் சிபாரிசு செய்துள்ளார்




**உவர் அமிலம்-1970ல் உப்பள ஜிப்சம்**

திரு.மாணிக்கவாசகர் D.A.E.O ஆக 1970 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த போது, Solten "Gypsum" உப்பள "ஜிப்சம்" உவர் அமிலத் தன்மைகளைமண்ணில் இருந்து நீக்குவதற்காகப் பாவிக்கும்படி சிபாரிசு செய்திருந்தார். பல விவசாயிகளும் "ஜிப்சம" பாவித்து நல்ல பலனைப் பெற்றனர்.

**இந்தியாவிலிருந்து தூய ஜிப்சம் இறக்குமதி**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர தூய ஜிப்சம் (98.6%) Minaral Gypsum உடன் மக்னீசியம் (கொழும்பு கொஸ்பேர்சல் கொம்பனியால்) சேர்ந்து தயாரிக்கப்பட்ட
மண்வளம் பெருக்கி
Gypsate-60 plus
(Ca-19%,Mg-7%, S-27%+9T.E)

# 13 ஆண்டுகளுக்குப் பின் வடமாகாணத்தில் சலுகை விலையில் இப்போது கிடைக்கிறது

முக்கிய கவனிப்பு :- மண்வளம் பெருக்கி ஜிப்சைற் பாவிக்கும் போது (1) 1 அடி உரம் (2) 1வது மேல் உரம் (3) 2வது மேல் உரம் குறைவாகவே பயிருக்குத் தேவைப்படும் இக்கலவை உரங்கள் குறைவாகவே பாவிக்கவும்.

**ஜிப்சைற் -60 பிளஸ் சிபாரிசுகள்**

1. நெல் வயலில்:- 2ஆம் உழவில் அல்லது கடைசி உழவில் 1 1/2 அந்தர் பாவிக்கவும்.(1 ஏக்கருக்கு)
2. மேட்டு நிலப் பயிர்களுக்கு:- 2ஆம் உழவில் அல்லது கடைசி உழவில் 1 அந்தர் வீதம்

**சிறந்த விளைச்சலுக்குக் கலவை உரங்களுடன்**
**ஜிப்சைற்-60 பிளஸ்**

a. அடி உரத்துடன்:- 25 Kg அடி உரத்துடன் 7Kg ஜிப்சைற் 60 பிளஸ் ஐ நன்றாகக் கலந்து ஒரு ஏக்கருக்கு 32 கிலோ பரவிக்கவும்.
b. 1வது மேல் உரத்துடன் Mg.s.Urea:- 25Kg யூரியாவுடன் 7 Kg ஜிப்சைற்-60 பிளஸ் நன்கு கலந்து
ஒரு ஏக்கருக்கு 32 கிலோ பாவிக்கவும்.
c. 2வது மேல் உரம்:- Mg.s. T.D.M 25Kg T.D.M உடன் 7 Kg ஜிப்சைற்-60 பிளஸ்சை நன்கு கலந்து ஏக்கருக்கு 32 கிலோ பாவிக்கவும். 1988,1989 காலப்பகுதியில் பல விளை நிலங்களில் பாவித்த போது நல்ல விளைச்சலை விவசாயிகள் பெற்றனர்.

**கிளிநொச்சி,முல்லை,கையிருப்பாளர்கள்:-**

பசுமை வேளாண் சேவை

கிளிநொச்சியில்
கிளிநகர் , கந்தபுரம்
முழங்காவில், முரசுமோட்டை,வட்டக்கச்சி,
உருத்திரபுரம்

முல்லைத்தீவில்
புதுக்குடியிருப்பு, முள்ளியவளை,
ஒட்டிசுட்டான், விஸ்வமடு,முத்தயன்கட்டு.
துணுக்காய்

மல்லாவியில்
கனகராயன்குளம், நெடுங்கேணி
மற்றும் விற்பனையாளர்கள்
கண்ணன் வேளாண்பொருள் வாணிபம்
(சுபாஜினி ரேடர்ஸ்)
யாழ் வீதி,
கிளிநொச்சி. கந்தபுரம் சந்தி.
கந்தபுரம்.

**வவுனியாவில் கையிருப்பாளர்:-**
ஈசன்
27,பசார் வீதி,
வவுனியா.

சலுகை விலையில் வன்னியில்
ஜிப்சைற் -60 பிளஸ்
50Kg-600/= 25Kg-315/=

உங்கள் வியாபாரிகளிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

இறக்குமதியாளர்:-
அக்றிகோலஸ்
46, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12
Tel-2325577, 0777624580



சிந்தனைக்கு

இன்றைய உலக ஒழுங்கைப் பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-11-2003

# இனி அவர்கள் கையில்!

விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவானது, யுத்தத்தினால் பாதிப்புற்ற வடக்கு-கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளுக்கென காணி, நிதி, சட்டம்-ஒழுங்கு, நீதி ஆகியவற்றிற்கான முழு அதிகாரங்களுடன் கூடியதான அதிகாரசபை ஒன்றைக் கோருகின்றது. இவ் அதிகார சபையானது மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான இடையூறற்ற சேவைக்கு அவசியமானதாகிறது.

கடந்த காலத்தில் கிடைக்கப்பெற்ற அனுபவம் மற்றும் தற்போதைய சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கோரப்பட்டுள்ள இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு தொடர்பாகப் பல்வேறு அபிப்பிராயங்கள் - அதாவது வரவேற்புக்கள், கண்டனங்கள், எதிர்ப்புக்கள் என்பன எழுதல் கூடும். எதிராகப் பெரும் போராட்டங்கள்கூட நடத்தப்படவும் கூடும்.

இக் கோரிக்கை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் இது அரசாங்கத்தின் கோரிக்கைகளிலிருந்து முரண்படுவதாகக் கூறியுள்ள போதிலும் பேச்சுவார்த்தை மூலம் முரண்பாடுகள் தீர்க்கப்படுமென எச்சரிக்கை கலந்த ரீதியில் கருத்து வெளியிட்டுள்ளார். இது தற்பொழுது அவரின் சூழ்நிலை சார்ந்த பேச்சுநடவடிக்கை என்றுகூடக் கூறலாம்.

இதேவேளை, இப்பத்தி எழுதப்படும் வரையில், எதிர்த்தரப்பினர் இது குறித்து வெளிப்படுத்திய உணர்வுகள், அபிப்பிராயங்கள் தெளிவாகக் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும், வழமை போலவே பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பி.யும் இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தமிழீழத்திற்கான முதற்படி என்றோ இலங்கையின் இறையாண்மைக்குப் பாதகமானது என்றோ கண்டனங்கள் தெரிவிக்க முற்படலாம். அதற்கு எதிராகப் போராடப் போவதாகவும் அறிவிப்புக்களைச் செய்தல் கூடும்.

இதேவேளை, ஒரு தரப்பினர் இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையானது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாக இல்லை எனவும் கூறக்கூடும். மற்றொரு தரப்பினர் ஆயுதப்படைகள் குறித்தும், விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் இராணுவப் பிரிவுகள் தொடர்பாகவும் இந் நகல்த்திட்டம் எதையும் கூறத் தவறிவிட்டது எனவும் குறை கூறக்கூடும்.

ஆனால், இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு அரசியல் யாப்பிற்கு உட்படுமா அன்றி உட்பட மாட்டாதா என்பது குறித்து ஆலோசனைகள் நடாத்தித் தயாரிக்கப்பட்டதொன்றல்ல. இத்திட்டவரைவானது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களின் உடனடித் தேவைகளை வழங்குவதற்கான ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டதொன்றாகும்.

அடுத்ததாக, இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையானது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதா? இல்லையா? என்ற நோக்கில் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து இது நோக்கப்படவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், சிறிலங்கா அரசியல் யாப்பானது தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றோ அவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு உருவாக்கப்பட்டதொன்றோ அல்ல. மாறாக, தமிழ்த் தரப்பினர் வேண்டாத விருந்தாளியாக முன்வைத்த ஆலோசனைகள் கூட முற்றாகப் புறந்தள்ளப்பட்டு உருவாக்கப்பட்டதாகும்.

இதேசமயம் ஆயுதப்படைத்தரப்பு குறித்து எதுவும் திட்டநகல் வரைவில் தெரிவிக்கப்படவில்லை என்பது பல கேள்விகளுக்கு இடமளிக்கக்கூடியதாக இருப்பினும், இத்திட்டவரைவு அமுல்ப்படுத்தப்படும் பட்சத்தில் சிவில் நிர்வாகம் நடைமுறையில் வருவது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும். இந் நிலையில் ஆயுதப்படைத்தரப்பு சிவில் நிர்வாகக் காலத்திற்குரிய நடவடிக்கைகளுடன் தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளுதல் தவிர்க்க முடியாததாகிவிடும். விடுதலைப்புலிகளின் படையணிகளும் அவ்வாறே செயற்படும்.

இதேவேளை, படைவிலகல், விடுதலைப்புலிகளின் ஆயுதக்கையளிப்புத் தொடர்பான விடயங்கள் பேசப்படாமை குறித்தும் கேள்விகள் எழுப்பப்படக் கூடியதாயினும், இவை குறித்து தற்போதைக்குப் பிரஸ்தாபிப்பதென்பது காலத்தால் முந்திய செயலாகவே இருக்கும். ஏனெனில், தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள வரைவானது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டமே ஒழிய இனப்பிரச்சினைத் தீர்விற்கான இறுதித் திட்டவரைவு அல்ல.

ஆனால், இத் திட்டவரைவு குறித்து கருத்து வேறுபாடுகள், ஆட்சேபங்கள் இருக்கலாம். ஆனால், இத்திட்டவரைவானது, உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டவல்லுநர்கள் மற்றும் இப் பிரச்சினையை ஒத்த சர்வதேச அனுபவங்களைக் கொண்டவர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டதாகும். அத்தோடு, இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையானது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்தைக் கொண்டது. ஆகையினால், அரசியல் துறைப் பொறுப்பாளர் கூறியிருப்பது போன்று இவ் அதிகாரசபை குறித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதென்பது சிறிலங்கா அரசையும், அனுசரணையாளர்களையும் பொறுத்த விடயமே. அதாவது பந்து அவர்களின் கையில்.

# ஜே.வி.பி.யுடன் தேர்தல் உடன்படிக்கை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பரிசீலனை

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யுடன் தேர்தல் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு திட்டமிட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

சிறுபான்மை இனங்கள் குறைந்து வாழும் பகுதிகளில் பொதுப்பட்டியல் மூலமும் சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தனித்தனியாக போட்டியிடும் பொது உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வது இதன் நோக்கமாகும். தென் வடமத்திய மேல் மாகாணங்களிலும் வட மேல் மாகாணத்தில் குருநாகலிலும் ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்டத்திலும் ஒரே பட்டியலிலும் மத்திய சப்ரகமுவ மாகாணங்களிலும், ஊவாவில் பதுளை மாவட்டத்திலும் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்திலும் தனித்து போட்டியிடவும் பட்டியல் தயாரிப்பது இந்நடவடிக்கையின் நோக்கமாகும்.

# தீயணைப்பு வாகன கொள்வனவில் மோசடி தொடர்பாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஏழு கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று தீயணைக்கும் வாகனங்கள் மேல் மாகாண சபையினால் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன என தெரிய வந்துள்ளது.

இம் மூன்று வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு கடைப்பிடிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைகளில் ஒழுங்கீனங்கள் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவ் வாகனங்களை கொள்வனவு செய்வதற்குத் தேவைப்பட்ட நிதியில் பெருந் தொகையை சனாதிபதி வழங்கியிருந்தார் மிகுதிப் பணத்தை மேல் மாகாண சபை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேற்குலகநாடுகளின் ஆலோசனையால் அரசு குருட்டுப் பயணம் மேற்கொண்டது

## பொ.ஐ.மு. பாராளு.உறுப்பினர் சாடல்

(கொழும்பு)

அமெரிக்கா உட்பட பல மேற்குலக நாடுகளுக்கு சென்று அவர்களின் சுரண்டல்களுக்குள்ளாகி, பலியாகி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் ஐ.தே.மு அரசின் குருட்டுப் பயணத்தை பொ.ஐ.முன்னணியாகிய நாமும் ஜே.வி.பி.யும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறினோம். அதன் பிறகே இந்த அரசின் கண்கள் பார்வை பெற்றன என களுத்துறை மாவட்ட பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, நாட்டின் பொருளாதாரத்தை சீரமைக்கும் போதும் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் போதும் அமெரிக்காவினதும் மேற்குநாடுகளினதும் உள்நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் இவ்வரசு செயற்படுகிறது. எனினும் பொ.ஐ.மு. உறுப்பினர் சிலர் தொடர்ந்து இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கும் பிராந்தியத்துக்கும் இதனால் ஏற்படும ஆபத்தை எடுத்துக் கூறும் பொறுப்பு எமது கட்சிக்கு ஏற்பட்டது.

அதன் விளைவால் அமெரிக்காவினதும் மேற்குநாடுகளினதும் பார்வை இந்தியா மீது திரும்பியது இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு அது பின்னணியாக அமைந்தது. இது ஒரு செயலிழக்கும் ஒப்பந்தமாகாமல் பார்த்துக் கொள்வது முக்கியமாகும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் இந்தியா தோல்வி

## 13 புள்ளிகளுடன் அவுஸ். முன்னணி

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றுமுன் தினம் மும்பையில் இந்தியாவிற்கும் - அவுஸ்திரேலியாவிற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

287ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி விளையாடிய இந்தியா 46.2 ஓவர்களில் 209 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. சச்சின்டெண்டுல்கர் 68 ஓட்டங்களும், அணித்தலைவர் ராகுல்ராவிட் 59 ஓட்டங்களும் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்ட அவுஸ்திரேலிய அணியின் டேமியன் மாட்டின் சதம் அடித்தார்.

ஸ்கோர் விபரம் வருமாறு:

அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 08 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்கள்

இந்தியா 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களும் இழந்து 209 ஓட்டங்கள். இப் போட்டித் தொடரில் இந்தியா-நியூசிலாந்து அணிகள் பங்கு பற்றிய முதலாவதுபோட்டி மழை காரணமாக நிறுத்தப்பட்டு தலா 3 புள்ளிகள் வழங்கப்பட்டன. இரண்டாவது போட்டியில் இந்தியஅணி அவுஸ்திரேலிய அணியை 37 ஓட்டங்களால் வென்றது. 3வது போட்டியில் அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்து அணியை 8 விக்கெட்டுக்களால் வென்றது.

அதன்படி 13 புள்ளிகளைப் பெற்று அவுஸ்திரேலிய அணி முதலாம் இடத்திலும் 8 புள்ளிகளைப் பெற்று இந்திய அணி இரண்டாம் இடத்திலும் உள்ளன.


இத்தொடர் 9 போட்டிகளைக் கொண்டது. இதேவேளை அடுத்த இரண்டு ஆட்டங்களுக்கு இந்திய அணியில் பாலாஜிக்கு பதிலாக அசிஸ் நேரா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தொடரில் அடுத்த போட்டி அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையே இன்று பூனேயில் நடைபெறவுள்ளது.

# கடுமையான போட்டிக்குத் தயாராவோம்

## இங்கிலாந்து அணித்தலைவர் அழைப்பு

பங்களாதேஷ் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய பின் தமது அணி கடுமையான போட்டியொன்றைச் சந்திக்க விருப்பதாக இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் தமது அணிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிர்வரும் 12 ஆம் திகதி முடிவடையும் பங்களாதேஷ் உடனான மூன்று ஒரு நாள் போட்டிகளின் பின் இங்கிலாந்து அணி சிறிலங்காவுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ள விருக்கிறது.

பங்களாதேஷ் உட்பட 10 டெஸ்ட் தொடர்களில் 07 போட்டிகளில் வெற்றிப் பெற்றாலும் சிறிலங்கா அணியைப் பொறுத்தவரை அனைவரும் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.



# திருமலை மாவட்ட கூட்டணிக் கிளையில் எனக்கெதிராக பொய்யான தீர்மானங்கள்

## ஆனந்த சங்கரி பி.பி.ஸிக்கு தெரிவிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்டக் கிளையில் தனக்கு எதிராக இரண்டு பொய்யான தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதாகவும் அதைப்பார்த்து விட்டு மட்டக்களப்பு கிளையும் தனக்கெதிராக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தமிழர் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி பி.பி.ஸி.க்குத் தெரிவித்துள்ளார்.

கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது அவர் மேலும் தெரிவிக்கையில், எனது பதவிக்கு எப்போதோ ஆபத்து வந்துவிட்டது. அந்த ஆபத்து பதவிக்கல்ல, கட்சிக்கே. இவை எதிர்காலத்தில் நடக்கப்போகின்ற ஒரு சம்பவத்திற்கு முன்னோடியாகவே நடக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு பொய்யான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிர்ப்பந்தத்தின் பேரில் அதைப் பார்த்து விட்டு மட்டக்களப்பிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவர்கள் ஒன்றும் பொய் சொல்லவில்லை. ஆனால் அழுத்தம் கொடுகக்கப்பட்டது. நான் விடுதலைப்புலிகள் பற்றி சொன்னது தவறு என்றும் அப்படிச்சொல்லியிருக்கக்கூடாது என்றும் அழுத்தம் கொடுத்து எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் நியாயமாக நேர்மையாக எடுத்த நடவடிக்கை.

அம்பாறையைப்பொறுத்துஅவர் இன்னும் அங்கத்தவராக வரவில்லை. அவர் பாராளுமன்ற உறுப்பினராக கூட்டணியில் வந்தவரேயொழிய நான் தலைவர் பதவியில் இருக்கின்றேன். அவர் அங்கத்தவராக சேர விண்ணப்பம் தந்ததே எனக்குத்தெரியாது. அவசரஅவசரமாக ஏதோ நேரத்திலே யாரோ சிலர் அவரைக் கொண்டு போய் தேர்தலில் போட்டியிட நியமித்தார்கள்.

நான் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்தவன் அல்ல. நான் தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கியவன். என்னைத்தலைமைப் பதவியிலிருந்து நீங்கச்சொல்லி கேட்பதற்கு எவருக்கும் தார்மீக உரிமை கிடையாது. எந்தக்கூட்டத்திலாவது தமிழர் விடுதலைக்கூட்டணி விடுதலைப்புலிகளை ஏகப் பிரதிநிதியாக அங்கீகரிப்பதாகச் சொல்லவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும் கூட்டணியின் சின்னத்தின் சார்பில் போட்டி போடுகின்ற நான்கு தமிழ்க்கட்சிகளுடைய பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளுடன் தான் அரசாங்கம் பேச வேண்டும். சம காலத்தில் அரசாங்கம் வேறு யாருடனும் பேசக் கூடாது என்று சொல்லியிருக்கேயொழிய அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் விடுதலைப்புலிகள் தான் ஏக பிரதிநிதிகள் என்று சொல்லவில்லை. நாங்கள் தேர்தலிலே அப்படிச் சொல்லித்தான் வென்றது என்பது உண்மைக்குப் புறம்பானது.

என்னைப் பொறுத்தவரையிலே நான் எரிக் சூல்கெய்மிற்கு ஒன்றரை வருடத்திற்கு முன்பே நாங்கள் இடைக்கால நிர்வாக ஆட்சி உரிமையிலே எந்த விதமான உரிமையும் கேட்கமாட்டோம். கூட்டணி முழு ஆதரவையும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் என்று சொல்லியிருக்கின்றோம். ஆனபடியால் இது ஒரு பிரச்சினையான விடயமல்ல. அவர்கள் பிரதிநிதித்துவம் கொடுத்தால் எடுப்பார்கள். கொடுக்காவிட்டால் நாங்கள் அதைப் பற்றி கவலைபடப்போவதில்லை.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்து நான கருத்துக் கூற முடியாது. கட்சி தீர்மானிக்க வேண்டிய விடயம். இதில் முழுக்க முழுக்க அவர்கள் கேட்பதை அரசாங்கம் கொடுக்குமாக இருந்தால் இருகையும் ஏற்று நாங்கள் வரவேற்போம். ஆனால், எதைக் கொடுக்க முடியும் எதைக் கொடுக்க முடியாது என்பதைத் தீர்மானிப்பது நானல்ல. அதை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும்.

# இடையில் நான் வந்ததாகக் கூறுவது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்

## ஆனந்த சங்கரியின் கூற்று குறித்து சந்திரநேரு

நீண்டகாலமாகவே எனது தந்தை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் பல முறைபோராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர் அவர். அப்படியான பாரம்பரியத்தில் வந்த என்னை இடையில் வந்ததாக ஆனந்தசங்கரி அவர்கள் கூறியிருப்பது வருத்தத்துக்குரியதும் எம்மை அவமானப் படுத்தும் செயலுமாகும் என அம்பாறை மாவட்ட தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் அவர்கள் தெரிவித்தார். பி.பி.ஸி.க்கு ஆனந்தசங்கரி அவர்கள் வழங்கிய பேட்டிகுறித்து கூறுகையிலேயேஅவர் இவ்வாறு கூறினார்.

அம்பாறையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தனியாக சந்திரநேரு என்ற தனியொருவர் எடுத்த தீர்மானம் அல்ல, இது அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிளைகளிலிருந்தும் வந்த உறுப்பினர்களால் எடுக்கப்பட்டத் தீர்மானமாகும். இந்த நிலையில் ஆனந்த சங்கரி அவர்கள் எங்களது பாரம்பரியத்தை உணராது நான் இடையில் வந்ததாகக் கூறுவது எனக்கு அவரது தற்போதைய நிலை குறித்த சந்தேகத்தை ஏற்படுத்து கின்றது என்றார்.

தமிழரசுக் கட்சியில் "அறப்போர் வீரர்"என அழைக்கப்படும் அரியநாயகம் அவர்களின் புதல்வரே சந்திரநேரு அரியநாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

### தனக்கு...

கட்சியின் உள்ளூர்த் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் ஆகியோருடன் நூற்றுக் கணக்கான கட்சி ஆதரவாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணிக்கு பிரார்த்தனை நிகழ்வுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் உள்ளூர் கட்சித் தலைவர்கள் சிலர் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் ந ரவிராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

அவ்வேளையில் முன்னறிவித்தல் ஏதுமின்றி கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி அங்கு பொலிஸ் பாதுகாப்புடன் வருகை தந்தார்.

பின்னர் அவர் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக கட்சியின் உட்கட்சிப் பூசல்கள் தொடர்பாகவும், தமிழரசுக் கட்சியின் மீள் உருவாக்கம் மற்றும் கூட்டமைப்பின் ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகவும் உரையாற்றினார்.

குறிப்பாக, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கிப்பேசிய அவர், நெருக்கடியான கால கட்டங்களில் கட்சிக்கு உதவ மறுத்தவர்களும், சந்தர்ப்பவாதிகளுமே தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து தமிழரசுக் கட்சியை உருவாக்க முற்படுவதாகச் சாடினார்.

அத்துடன் குடாநாட்டில் பரவலாக விநியோகிக்கப்பட்ட குறித்த துண்டுப் பிரசுரம் தொடர்பாக சாடி உரையாற்றினார்.

இந்நிலையில், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை கிளைகளால் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக யாழ் கிளையால் கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட வேண்டுமெனவும், அத்துடன் தம் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தி தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டுமெனவும் அங்கு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், அங்கு தலையிட்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் இக்கூட்டம் கட்சித்தலைமைக்கிடையே உள்ள முரண்பாடுகளை நீக்கி ஒற்றுமைப்படுவது தொடர்பாகவே இக்கூட்டம் கூட்டப்பட்டதன்றி, யாரிற்கும் ஆதரவாகவோ எதிராகவோ தீர்மானம் நிறைவேற்றவில்லையென மறுதலித்தார்.

இதையடுத்து இருவருக்குமிடையே வாக்குவாதங்கள் ஏற்பட உள்ளூர் கட்சித் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களும் குறுக்கிட்டு உரையாற்றினர்.

எனினும், தமிழர் விடுதலைக் கூட்டணியிடையேயான ஒற்றுமையை உருவாக்க மத்திய குழு மற்றும் செயற்குழு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மற்றும் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் கைவிடப்பட வேண்டுமென்றும் முடிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ்சால் அறிவிக்கப்பட்டு உள்ளூர்கட்சித் தலைவர்கள மற்றும் ஆதரவாளர்களால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

ஆயினும், இதனிடையே வீ. ஆனந்தசங்கரி தன்னால் முன்வைக்கப்பட்ட கண்டனத் தீர்மானம் தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்த முற்பட்டதையடுத்து அதற்கு கண்டனம் தெரிவித்து ஆதரவாளர்கள் மற்றும் உள்ளூர் தலைவர்கள் கூட்டத்தை இடை நிறுத்தி வெளியேறினர்.

இதனால், குறித்த தீர் மானங்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் பிசுபிசுத்துப் போனது. (27, 33)

### 29வது...

ரியங்களுக்கு உட்பட்டனர்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற 27 ஆவது விளையாட்டு விழாவின் போது தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் 2003 ஆம் ஆண்டு விழாவில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட நடைமுறை சமாதானச் சூழலுக்கு ஒவ்வாத செயலென பலரும் தெரிவிக்கின்றனர்.

### இனப்பிரச்சினைத்...

விட்டது. எதிர்க்கட்சி மற்றும் சனாதிபதி ஆகியோர் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி நாட்டின் பாரிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும். தங்களுக்குரிய பொறுப்பை கடமையை அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் இப்பொறுப்பில் இருந்து அவர்கள் விலகிச் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (25)

### சிறிலங்கா...

இதேவேளைஇந்தக் கால கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்பதற்கு சனாதிபதி முயற்சி மேற்கொள்ளக்கூடாது என்று மல்வத்த பீடத்தின் மகா நாயக்கர் சர்ச்சைக்குரிய ரம்புக் வலசிறிவிபசிதேரர் கூறியுள்ளார்.

இத்தகைய நடவடிக்கையின் மூலம் நாட்டின் பிரச்சினைகள் மோசமடையும். தற்சமயம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையிட்டு சர்வதேச சமூகம் பாராட்டைத் தெரிவித்துள்ளது. இத்தகைய சந்தர்ப்பத்தில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்வதற்கு சனாதிபதி ஆதரவு வழங்கவேண்டுமேயொழிய அதற்குத் தடைகளை ஏற்படுத்தக்கூடாது என்றும் தேரர் கூறியுள்ளார். (32)

# மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவின் புதிய அணி பயிற்சி நிறைவு

மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவின் புதிய அணி நேற்று பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளது. மனிதநேய கண்ணிவெடியகற்றும் பயிற்சியை (DDG) டென்மார்க் கண்ணிவெடியகற்



றும் குழுவின் உதவியுடன் வழங்கியுள்ளது. 44 பேர் கொண்ட இந்த அணி DDGயின் அனுசரணையுடன் பூநகரிப் பகுதியில் கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபடவுள்ளது. இப்பகுதியில் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவில் 42 பேர் கொண்ட அணியொன்று பணியில் ஈடுபட்டு வருகின்றது. பூநகரியின் கறுக்காய் தீவுப்பகுதியில் இவ்வணி இதுவரை பத்தொன்பது மிதிவெடிகளையும் ஒரு வெடிக்காத வெடி பொருளையும் மீட்டுள்ளது.

அடுத்த மாதம்முதல் மனித நேயகண்ணி வெடியகற்றும் பிரிவின் இந்த இரு அணிகளும் பூநகரிப்பகுதியில் முழுமையான பணியில் ஈடுபடவுள்ளன.

# ஹக்கீம் தலைமையிலான குழுவினர் இன்று கொழும்பு திரும்புகின்றனர்

(கொழும்பு)

சமஷ்டி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக இங்கிலாந்து சென்றிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலமைப்புக் குழுவினர் இன்று கொழும்பு திரும்புகின்றனர்.

இதனையடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பிலர்களையும் சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் தலைமையிலான அரசியலமைப்புக் குழுவினர், அங்கு பல்வேறு தெளிவுகளைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில், எதிர்வரும் நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவிருக்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம்கள் தனித் தரப்பாக பேச்சுவார்த்தையில் பங்கு கொள்வது குறித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார். அத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலமைப்பு குழுவினர் இடைக்கால நிர்வாகம் தொடர்பான மாற்று யோசனை தொடர்பாகவும் ஆராயப்படவிருக்கின்றன.

இதேவேளை, இந்தியாவின் டார்ஜிலிங் மாவட்ட கூர்க்காலாண்ட் பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் அதிகாரப் பகிர்வு விடயங்களை அவதானிப்பதற்காக காங்கிரஸ் இந்த மாத இறுதியில் அங்கு செல்கிறது. (32)

# இல. உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வெளிநாடுகள் ஆதிக்கம் செலுத்த முடியாது

## போரூட்டின் இல. வதிவிடப் பிரதிநிதி

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வெளிநாடுகள் எவையும் ஆதிக்கம் செலுத்த முடியாது. இவ்வாறு குறிப்பிட்டுள்ள போரூட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி போல்கென்றிக் கெய்லான்ட் நோர்வே இருதரப் புக்களினது இணைப்பாளராகவே செயற்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச இளைஞர் பாசறையினை இன்று புத்தளம் சாகிரா தேசியக் கல்லூரியில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, பொலனறுவை மாவட்டங்களைச் சேர்ந்த 450 தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.

யுத்த நிறுத்தத்தின்மூலம் மட்டுமே சமாதானத்தை எட்டிவிட முடியாது. அதற்காக தியாகங்கள் பலதைச் செய்ய வேண்டும். இந்த விட்டுக் கொடுப்புக்களைப் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்திருக்கும் சகல தரப்புக்களும் மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுப்பதே நோர்வே அனுசரணையாளர்களின் பணியாகும்.

நோர்வே அரசு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதானது நாட்டில் சகல மக்களும் அச்சமற்ற சூழ்நிலையில் மீண்டும் வாழ வேண்டுமென்பதற்காகவே எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பயிற்சிப் பாசறை இன்று முடிவடையும். (32)

### வடக்கு...

மேலும் மூன்று உறுப்பினர்களையும் பாராளுமன்ற கூட்டத்தில் வரும் புதன்கிழமை சந்திக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

போட்டிக்குழுவின் சார்பில் அதாவுல்லாவுடன் பிரதி அமைச்சர் அப்துல்காதர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அஸ்வர், என் ஏ. அசீஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபைக்கான வரைவை சமர்ப்பித்ததையடுத்து வடக்கு-கிழக்குப் பகுதிகளில் முஸ்லிம் களின் வருங்காலம் பற்றி ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

### வட-...

திட்டவரைவில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

எனினும், தாம் முஸ்லிம்களின் மாற்று யோசனையை எதிர்வரும் 6ஆம் திகதி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முன்வைக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.